பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 மார்கழி 19 ஸபர் 3 இதழ்: 320

யாழ்ப்பாணம் புதன்கிழமை 3-1-79

## ரூ. 27 கோடி உதவியுடன் ரயில் சேவை நவீனமயமாகும்

[கொழும்பு]

அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் ரயில் சேவையை நவீனமயப்படுத்துவதென போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்திற்கு பிரிட்டனிடம் இருந்து 27 கோடி ரூபா பெறுமதிமிக்க உதவி பெறப்படும்.

போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். மொஹமத் நடத்திய இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன.

பழுதான பாதைகள் சீரமைக்கப்படும் என்றும் புதிய பாதைகள் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரயில்கள் தாமதமாகச் செல்வதற்கு பாதைகள் சீரற்றிருப்பதே காரணம் என நம்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

★ திருநெல்வேலி வங்கிக்கொள்ளை - கொலைச் சந்தேக நபர்களைத் தேடி

# பொலிஸ் - ராணுவம் கூட்டாக நடத்திய தேடுதல் 'வேட்டை'!

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
LIBRARY

## முத்தையன்கட்டு நேற்று சுற்றிவளைக்கப்பட்டது

### இரகசியத் 'தகவல் முயற்சி' தோல்வி; டைனமைற், கெற்புகளுடன் ஒருவர் கைது

முத்தையன்கட்டு

'பயங்கர கொலை-கொள்ளை குற்றவாளிகள்' என்று வர்ணிக்கப்பட்ட சிலர் சம்பந்தமாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து; யாழ்ப்பாணத்திலிருந்து எண்பதுமைல் தூரத்திலுள்ள பெரிய ஆறு-முத்தையன்கட்டு குடியேற்றத்திட்டப் பகுதியில் பொலிஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக நேற்று அதிகாலை நடத்திய தீவிர தேடுதல் வேட்டை கடைசி நேரத்தில் தோல்வியில் முடிந்து விட்டதாக அறியப்படுகிறது. பயங்கர நபர்கள் என்று வர்ணிக்கப்பட்டவர்கள் தலைமறைவாகியிருக்கலாம் என்று கருதும் பொலிஸாரும், இராணுவத்தினரும்; சந்தேக நபர் ஒருவரை இங்கு கைது செய்துள்ளதுடன், ஒரு வீட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவு டைனமைற், திரிகள், கெற்புகள் ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளனர்!

### இரகசியத் தகவல்

இதுபற்றித் தெரியவருவதாவது;

திருநெல்வேலி மக்கள் வங்கிக் கொள்ளை—கொலை சம்பந்தமான சந்தேகநபர்கள், பெருமளவு பணத்துடன் பெரிய ஆறு-முத்தையன்கட்டு குடியேற்றத்திட்டத்தில் முகாமிட்டுள்ளனர் என்றும், ஏராளமான பணத்துடன் காணப்படும் இவர்கள் எந்நேரத்திலும் தலைமறைவாகிவிடலாமென்றும், உடனடியான நடவடிக்கையில் இறங்குமாறும், இப்பகுதிக்கு ஒரு இரகசியப் பொலிஸ்கோஷ்டியை அனுப்பி வைக்குமாறும் குறிப்பிட்ட ஒரு நபரிடமிருந்து சில இரகசியத் தகவல்கள் யாழ். பொலிஸ் அதிபருக்கு கிடைக்கப்பெற்றதென்றும், இதுசம்பந்தமாக தீவிர ஆலோசனை நடத்திய பொலிஸார் ஏ. ஐ. டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை மற்றும் அவருடன் சென்ற பொலிஸாருக்கு நிகழ்ந்த சம்பவத்தைக் கவனத்துக்குக் கொண்டுவந்ததாகவும், இதனைத் தொடர்ந்து இராணுவம்-பொலிஸ் கூட்டு நடவடிக்கைபற்றி ஆலோசிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

### பொலிஸ்-இராணுவ முயற்சி

இரகசியத் தகவல் குறித்து யாழ் பொலிஸ் அதிபர் திரு எகொடபிட்டியா, முல்லைத்தீவு இராணுவ முகாமைச் சேர்ந்த மேஜர் சில்வாவுடன் தொடர்புகொண்டு தீவிர ஆலோசனை நடத்தியதாகவும்; முழுஅளவில் பூரண ஆயுதங்களுடன் இராணுவமும் பொலிஸாரும் கூட்டாக முத்தையன்கட்டுவில் தேடுதல் நடத்தத் திட்டமிட்டதாகவும் அறியப்படுகிறது.

### அதிகாலை 'வேட்டை'

இதனைத்தொடர்ந்து யாழ் பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு ஜெனி குணசிங்கா, மாங்குளம் இராணுவமுகாமைச் சேர்ந்த மேஜர் . . . யஸ் தலைமையில் சுமார் எண்பது இராணுவத்தினரும் பொலிஸாரும் பூரண ஆயுதங்களுடன் நேற்று அதிகாலை சுமார் நான்கு மணியளவில், பெரிய ஆறு-முத்தையன்கட்டு குடியேற்றத் திட்டத்தை சுற்றி வளைத்தனர்.

இரகசியத்தகவல் கொடுத்த நபர் குறிப்பிட்டபகுதி நெரிசலாக சுற்றிவளைக்கப்பட்டது.

அதிகாலை முதலே, முத்தையன்கட்டுப் பகுதியிலுள்ள சுமார் இருபது தோட்டங்கள் தீவிரதேடுதலுக்குள்ளாயிற்று.

### தீவிரமுயற்சி

பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக தீவிரத்தேடுதல் நடத்தியபோதிலும், இரகசியத் தகவல் கொடுத்த நபரோ அல்லது தகவலளித்த நபர் குறிப்பிட்ட பகுதியில் சந்தேக நபர்களோ அல்லது வங்கிப் பணமோ அகப்படவில்லை என்றும், இந்த வேட்டையின்போது வேறு சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு அவர் வசமிருந்த சட்டவிரோதப் பொருளகள் கைப்பற்றப்பட்டதென்றும் தெரியவந்துள்ளது.

### ஒருவர் கைது!

மயிலு சின்னத்தம்பி என்பவர் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு அவரது வீட்டிலிருந்ததாகக் கூறப்படும் இறக்கு

(6ம் பக்கம் பார்க்க)

## கிரிக்கெட் டெஸ்ட்டில் இந்தியா ஏற்படுத்திய புதுமை

### கவாஸ்கர் சாதனை புரிந்தார்

[கல்கத்தா]

டெஸ்ட்கிரிக்கெட் போட்டியில், இந்தியா நேற்று ஒரு சாதனை ஏற்படுத்தியது!

இந்திய கிரிக்கெட் காப்டன் சுனில் கவாஸ்கர் (29 வயது) ஆட்டமிழக்காமல் 182 ஓட்டங்கள் எடுத்து, ஒவ்வொரு இன்னிங்ஸிலும் 100க்கும் அதிகமான ஓட்டங்களை மூன்று டெஸ்ட்போட்டிகளில் எடுத்து இந்தியாவின் 'இளைய வீரர்' என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

இங்கு நடைபெறும் மேற்கிந்திய—இந்திய டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஒருவிக்கட் இழப்புக்கு 361 ஓட்டங்கள் எடுத்து சாதனை

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆட்டத்தை முடித்தார் ஆனந்தன்

(கொழும்பு)

ஆழிக்குமரன் ஆனந்தன் நேற்று (2-1-79) அதிகாலை தமது 'டுவிஸ்ட்' ஆட்டத்தை முடித்துக்கொண்டார்.

இதன்பின் அவர் வைத்திய சிகிச்சையின் பொருட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## உள்ளூர்ச் சேவைக்கு 10 புதிய பஸ் வண்டிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் உள்ளூர்ச் சேவைக்காகப் பத்துப் புதிய பஸ்வண்டிகள் வந்துசேர்ந்துள்ளன.

பண்ணையில் அமைக்கப்பட்டுவரும் புதிய உள்ளூர் பஸ் சேவை நிலையமும் இம்மாதமுடிவுக்குள் திறக்கப்படுமென்று தெரிகிறது.

## கொழும்பில் 'அன்டாட்' மாநாடு அடுத்த வாரம் ஆரம்பம்

[கொழும்பு]

நாற்பத்தைந்து நாடுகளைச் சார்ந்த 200க்கு மேற்பட்ட பிரதிநிதிகளும், 100க்கு மேற்பட்ட பார்வையாளர்களும் கலந்துகொள்ளும் 'அங்டாட்' மாநாடு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இம்மாதம் 8ந் தேதி ஆரம்பமாகிறது. ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனமாநாட்டை அன்று ஆரம்பித்துவைப்பார்.

ஜனவரி 10ந் தேதியிலிருந்து 17ந தேதிவரை அமைச்சர்கள் மட்டத்திலான உயர் மாநாடு நடைபெறும். [ம]

## இலங்கை அரசின் போக்கு: பர்மா ஈழமாணவர் மன்றம் கண்டனக் கூட்டம்

ரங்கூன். ஜன. 2

பர்மாவில் உள்ள ஈழமாணவர் பொதுமன்றம் இலங்கை அரசாங்கத்தின் போக்கைக்கண்டிக்கும் வகையில் கண்டனக்கூட்டம் ஒன்றினை நடத்தியது.

ரங்கூன் திங்காஞ்சூன் மாவட்டத்தில் உள்ள "அன்பகத்தில்" பர்மா ஈழமாணவர் பொதுமன்றப் பொதுக்குழு உறுப்பினர் திரு இரா. கண்ணன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்ப்பகுதிகளில் சிங்களவர் குடியேற்றம், ஆகஸ்ட் இனக்கலவரம் என்பன குறித்து

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

ஊதுபத்தி, கர்ப்பூரம் ஆகிய தொழிலில் அனுபவம் வாய்ந்த பெண்பிள்ளைகள் தேவை. உடனடியாக நேரிலோ கடித மூலமோ தொடர்புகொள்ளவும். திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ் 119, கே. கே. எஸ். றோட், கொக்குவில் (சந்தி). 1211

### விற்பனைக்கு

சிசில் ஐஸ்பெட்டி, றெக்கோட் பிளேயர், விக்குவிடைசர், உட்படப்பல மின்சார உபகரணங்கள் ஏ. இராஜசிங்கம், 330 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1219

## ஆஸ்பத்திரிக்கு இரண்டரை லட்சம் ரூபா

(திருகோணமலை)

கந்தளாய் அரசாங்க ஆஸ்பத்திரியின் அபிவிருத்திக்கென சேருவில பாராளுமன்ற உறுப்பினர் திரு. எச். டி. எல். லீலரெட்ண பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் ஆரம்ப வேலைகளுக்கென இரண்டரை லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளார்.

இவற்றில் நோயாளர்கள் தங்குவதற்கான வார்டுகள் பன்னிரண்டு நிறுவப்படுவதோடு ஆஸ்பத்திரியின் சமையலறையொன்றும் பிரேதசாலையொன்றும் நிறுவப்படவுள்ளது. (3க)

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த கனகராயர் கைம்பெண் அருந்தவநாயகி என்பவரின் மரண சாதனத்தின் விடயத்தில்
மரணமெய்தியவர்

தெல்லிப்பழை கிழக்கு கனகநாயகம் ஜனநாயகம்
மனுதாரர்

மரணசாதன )
நியாயாதிக்கம்)
இல. 25

மேலேயுள்ள இலக்கங்கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டவரான மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31 ஆந்நாளன்று, அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றான கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

நீதிமன்றக் கட்டளைப்படி
றி. ஜெயராசசிங்கம்
பதிவாளர்.

1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ஆந்நாளன்று தேதியிடப்பட்டது.

என்னால் எழுதப்பட்டது.
செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி.
மல்லாகம். 1181

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு 14777

க. சிற்றம்பலம் ஆறுமுகம்
காரைநகர் மேற்கு
காரைநகர்
வழக்காளி.

எதிராக

கார்த்திகேசு சிவஞானசுந்தரம் பழைய கண்டி
காரைநகர் வடக்கு
காரைநகர்.

யாழ்ப்பாணம் மாவட்ட கோட்டின் ஈடு 14777ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி. பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1979ம் ஆண்டு தை மீ 30 உ செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 87000ம் 1975-3-5 தொடக்கம் 1976-6-1வரைக்கும் ரூபாய்5000க்கு 8வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 9 வீத வட்டியும்கோட்டுச் செலவு ரூபாய் 347-66. இதில் (செலவில்) 150 ரூபா கழிக்கவும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணப் பட்டினத்திற்கு தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று வலந்தலை இறைடச் றித்தாபூவு தி. பர. 16 பனைகள் வடலிகள் வான்பயிர் செய்யிர்களு எல்லை கிழக்கு முருகர் சங்கரப்பிள்ளை பெண் பூரணத்துக்கும் இராமநாதர் செல்லத்துரைக்கும் உரிய ஆதனங்கள் வடக்கு ஒழுங்கையும் சண்முகம் கார்த்திகேசுவுக்கும் மறுபேருக்கும் உரிய வாதனங்கள் மேற்கு ஆறுமுகம் சபாபதியினுர் வமக் காரிஞுதனம் தெற்கு சுவாமிநாதர் அருளம்பலத்துக்கும் முருகேசு வல்லிபுரத்துக்கும் இராமலிங்கம் சோமசுந்தரத்துக்கும் உரிய ஆதனங்கள் இதடங்கலும்.

எஸ். சங்கரப்பிள்ளை ஜே. பி.
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்

வேப்பதி
புத்தூர்.
29-12-78 1215

அரியாலை, சுதேசிய திருநாட கொண்டாட்ட
(60ம் ஆண்டு)

## வைரவிழா

6-4-79 — 14-4-79

மேற்படி விழாவையொட்டி அகில இலங்கை ரீதியில் நடைபெறவிருக்கும் நாடகப் போட்டியின் பரிசில்கள் பின்வருமாறு:

1வது ரூ 1000/- 2வது ரூ.300/- 3வது ரூ.100/-

விபரங்களுக்கு 15-1-79க்கு முன் தொடர்பு கொள்ளுங்கள்.

நாடகச் செயலாளர்:

வைரவிழாக் காரியாலயம்,
204, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
1222

## காரைநகர் ப. நோ. கூ. சங்கம் காரைநகர்

## சாக்கு விற்பனை

மேற்படி சங்கத்தில் 6000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்கு இருக்கின்றன. உப்பு, புளி தவிர்ந்த ஏனைய சாக்குகள் முழுவதற்கும் சாக்கு ஒன்றின் விலை குறித்து கேள்வி அனுப்ப வேண்டும் கேள்விகள் யாவும் தலைவர், காரைநகர் ப. நோ. கூ. சங்கம், காரைநகர் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 10-1-79 நண்பகல் 12-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
காரைநகர்,
ப. நோ. கூ. சங்கம்.
1-1-1979 1223

மு. க. முத்துக்குமார்,
சட்டத்தரணி,
பருத்தித்துறை.

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்,

கரணவாய் வடக்கு நவிண்டில் காலஞ்சென்ற சின்னத்தம்பி விசுவலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லா சொத்துவிடயத்தில்:
மரணமெய்தியவர்

சின்னத்தம்பி விசுவலிங்கம் கைம்பெண் தங்கம்மா "பாக்கியஸ்தான்", நவிண்டில், கரவெட்டி.
மனுதார்.

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. 1058

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ளவர் எவரும், 1979 ஆம் ஆண்டு, மாசி மாதம், 16 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
க. விஸ்வலிங்கம்,
பதிவாளர்.

1978 ஆம் ஆண்டு, மார்கழி மாதம், 28 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
1217

## நூல்நிலையம் நவீனமாகும்

[புலோலி]

புலோலிப் பகுதி மக்களின் நன்மைகருதி புலோலிகிராம சபை பொதுநூல் நிலையம் நவீனமயப் படுத்தப்படவுள்ளது.

இப்பொழுது நூல்நிலையத்திற்கு புதிய நவீன கட்டடத்தை அமைப்பதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 32 000 ரூபாவை பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் ஒதுக்கியுள்ளார். இந்தப் புதிய நவீன கட்டிடத்தை அமைப்பதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகளை புலோலி கிராமசபை விசேட ஆணையாளரும், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபருமான திரு வை. வேலும் மலும் மேற்கொண்டுள்ளார்.

# குரும்பசிட்டி மக்களின் குலதெய்வம்

-- த. இராசரத்தினம் --

[குரும்பசிட்டி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகிறது]

உலகமாதாவாகிய அன்னை பராசக்தி முத்துமாரி அம்பாள் அருள் முகூர்த்தம் கொண்டு அருள்பாலிக்கும் சிறந்த திருத்தலங்களில், குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயமும் ஒன்று. இத்திருத்தலம் குரும்பசிட்டியிலும் அயற் கிராமங்களிலும் வதிகின்ற சைவநன்மக்களின் கண்கண்ட தெய்வமாகும் அம்பாள் சருணைப்பிரவாகத்தினல் இக்கிராமங்கள் திருவருட் பொலிவு பெற்று விளங்குகின்றன, வளர்கின்றன, வாழுகின்றன. இத்தலத்தின் நித்திய நைமித்திய ஒழுங்கும், வழிபாடும் அடியார்களின் ஈடுபாடும் பயபக்தியும் பலராலும் போற்றப்படுபவை. இத்தலத்துக்கு அமைந்த இன்னொரு விசேடம் மார்கழி மாதம் திருவெம்பாவைக்காலத்தை வருடாந்த மகோற்சவ காலமாக அமைந்துள்ள சிறப்பாகும்.

இக்கோயில் கொடித்தம்பம் அலங்காரச சித்திரத்தேர், உள்வீதியை மூடிக் கொட்டகை, சுற்றுப்பிரகாரக் கோவில்கள், மின்விளக்கு, தீர்த்தத்தொட்டி, தண்ணீர்க் குழாய்கள், அழகான வாகனங்கள் விசேஷமாக மகர வாகனம், கயிலயவாகனம், அன்னவாகனம் மற்றும் வெளி மண்டபங்கள் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன. கலியாண மண்டபத்தில் வருடத்தில் பெரும்பாலான நாட்கள் திருமண விழாக்கள் நடைபெறும் அன்னதானமண்டபத்திலும் விசேஷ உற்சவ காலங்களிலும், சிவபுண்ணிய நாட்களிலும் அன்னதானம் வழங்கப்படுவது இத்தலத்தின் விசேஷ சிறப்பாகும்.

குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில் மாதாமாதம் சோதிநாள் சஞ்சி, மாதப்பூரத் திருவிழா, நவராத்திரி, திருவெம்பாவைக்கால வருடாந்த மகோற்சவம், குளிர்த்தி, தைப்பூசம், பொங்கல், மாசிமகம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், வருடப்பிறப்பு, சித்திராபூரணை, வைகாசி விசாகப் பொங்கல், ஆனி உத்தரம், ஆவணி மூலம், புரட்டாசிச் சனி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகைத் தீபம், சங்காபிஷேகமென 65 க்கு மேற்பட்ட விழாக்கள் நடப்பது இவ்வாலயத்தின் சிறப்பாகும்.

தேரத்தவருத பூசையும் உலாத்தில் அனமதியை எழுப்பக்கூடிய உற்சவவிழாக்களும் இங்குநடைபெறுகின்றன. ஆலயத்தொண்டின் முக்கிய அம்சமாக குரும்பசிட்டி சன்மார்க்கசபையினர் சுத்தம், ஆலயத்திருத்தொண்டுகள், அலங்காரப புனிதம், கூட்டுப் பிரார்த்தனை சைவப்பிரசங்கங்கள் எல்லாம் சிறப்பாக நடைபெற விசேஷ கவனமெடுத்து உழைத்துவருகிறார்கள்.

இன்று கொடியேறும் இவ்வாலய உற்சவநாட்கள் 11 தினங்களிலும் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்கவி சீ. விநாசித்தம்பி, திரு ச. விநயாகமூர்த்தி, வித்துவான் இ. திருநாவுக்கரசு, திரு. செ. கதிரேசர்பிள்ளை உட்படப்பல சைவ அறிஞர்களின் சொற்பொழிவுகள் இடம்பெறும். (அ)

## சமாதான நீதவான்

(யாழ்ப்பாணம்)

திரு பொன்னுசாமி கனகசபாபதி யாழ் உயர் நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் யாழ் மாவட்டத்தில் ஒரு சமாதான நீதிபதியாக இம்மாதம் 21ம் திகதி சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

சமூக, சமய கலாசார விடயங்களில் அதிக ஈடுபாடு கொண்டவரான இவர் இலங்கை புகையிரத சேவையிலிருந்து 1970ம ஆண்டு ஓய்வு பெற்றார் அதன்பின் அரசியலில் ஈடுபட்டுவந்துள்ளார்.

ஐக்கியதேசிக்கட்சியின் மூலமனைய தலைவர்களான டட்லி சேனநாயக்கா, சேர் ஒலிவர் குணதிலகா போன்றவர்களின் மதிப்பைப் பெற்றிருந்த இவர் 1974ம் ஆண்டு யாழ்ப்பாணப்பகுதி ஐக்கிய தேசியக் கட்சி பிரதம அமைப்பாளராக திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவால் நியமிக்கப்பட்டார்.

## வேலணையில் பாராட்டுவிழா

[வேலணை]

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு மு. தம்பிமுத்து வேலணை நேதாஜி சனசமூக நிலையத்தின் போஷகராக இருந்ததையும் அவர் தமது பகுதிக்குட்பட்ட மக்களுக்கு சிறப்பான சேவையாற்றியமையைப் பாராட்டுமுகமாகவும் சனசமூக முன்றலில் இம் மாதம் 20-ம் திகதி பொதுவரவேற்பொன்றை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வைபவத்தில் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் உடுப்பிட்டி எம். பி. திரு ரி. இராசலிங்கம் செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு. வ. பொன்னம்பலம் உட்படப்பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர்.

விழாவில் அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையினரால் நடாத்தப்பட்ட நாடகப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மேற்படி சனசமூக நிலையத்தின் அங்கத்தவர்களுக்கும் பட்டம் பரிசும் வழங்கப்படும் இடம்பெறவிருக்கின்றது. விழாவுக்கு நிலையத்தலைவர் திரு ராஜரத்தினம் தலைமை வகிப்பார் [உ]

## தற்கொலை முயற்சி

[திருகோணமலை]

சிறுநீர் கோளாறினால் கஷ்டப்பட்ட பெண் நோயாளி ஒருவர், வருத்தம் தாங்க முடியாத நிலையில் வைத்தியசாலைக்கு அருகிலுள்ள கடலில் விழுந்து தற்கொலை செய்ய முயற்சித்தார். இதனை மீன் பிடிக்கச் சென்ற இருவர் கண்டு அவரைக் காப்பாற்றி வைத்தியசாலை நிர்வாகிகளிடம் ஒப்படைத்தனர்.

## முக்கிய அறிவித்தல்

வெளிநாடுகளில் வேலைதேடித்தருவதாக என்னுடைய பெயரைச் சொல்லி சிலர் பணம் வசூலிப்பதாக அறிகிறேன் இதற்கு நான் பொறுப்பல்ல என்பதை அறிவிக்கின்றேன்.

என். கனகசூரியர்
கொழும்பு-6 1224

# மக்கள் கருத்து

## உத்தியோகத்தர்கள் நேரில் சென்று பார்க்கவேண்டும்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு கீழ் வரும் அதோடு மிகவும் அருகிலிருக்கும் இடத்திற்கு குப்பை கூளங்களை அள்ளும் லொறியின் திடீர், திடீர் விஜயத்தை முற்றாக நிறுத்திவிட்டதன் காரணமாக நான் மாநகரசபை சுகாதாரப் பகுதியோடு பல தடவைகள் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு இதைப்பற்றி முறையிட்ட போது தாங்கள் உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறினார்கள்.

இன்றுவரையும் ஒரு நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் நான் நேரடியாகச் சென்று அங்குள்ள உத்தியோகத்தர்களிடம் முறையிட்டபோது அவர்கள் குப்பை அள்ளிச் செல்ல வாகனங்கள் ஒன்றுமில்லை என்று அறிவித்தார்கள். அதனால் தாங்கள் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். இதைக் கேட்ட எனக்கு எங்கள் மாநகரசபைக்கு வாகனங்கள் ஒன்றும் இல்லாமற் போனாலும் ஒரு மாட்டு வண்டி கூடக் கிடைக்காமல் போனதையிட்டு மனவருத்தமாகவும் அவமானமாகவும் இருந்தது.

சுகாதாரப் பகுதியினர் மாநகரசபைக்குள் அடங்கும் வீதிகளை நேரில் சென்று பார்வையிட்டால் தான் வீதிகளுடைய அலங்கோல நிலை அவர்களுக்கு விளங்கும். வீதிகளில் நடமாட முடியாமலும் கொசுத் தொல்லைகளாலும் மக்கள் எவ்வளவு அவதிப்படுகிறார்களென்பதை எழுத்து மூலம் சுட்டிக்காட்ட முடியாமல் இருக்கிறது.

சுகாதாரப் பகுதியினர் கந்தோரில் இருந்தபடி நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்று சொன்னால்மட்டும் போதாது நேரில் சென்று அதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுத்தால் தான் நன்றாக இருக்கும்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் இதற்கு உடன் நடவடிக்கை எடுத்து வீதிகளில் மக்கள் நடமாடவும், நிம்மதியாக நித்திரை செய்யவும் உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அரியபுத்திரன் அரியநேசன்
நல்லூர்.

## பஸ்நிலையத்தில் ஒழுங்கீனங்கள்!

யாழ். பஸ் நிலையத்தில் பல்வேறு விதமான மேற்பார்வை உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றனர். ஆனால் உண்மையில் இவர்கள் பெயரளவில் தான் இருக்கின்றனரே தவிர கடமையைச் சரிவரச் செய்கின்றனரா என்று பஸ் பிரயாணிகள் அங்கலாய்க்கின்றனர்.

பஸ் தரிப்பு இடங்களில் பொதுமக்கள் வரிசையாக நிறுத்தப்பட்டாலும் பஸ் உரிய இடங்களில் நிறுத்தப்பட்டதும் சிலர் வரிசையைக் கவனியாது வரிசையில் நிற்பவர்களை இடித்துத் தள்ளி தாங்கள் இடம்பிடிப்பதையும் சில நேரங்களில் இ. போ. ச. ஊழியர்களும் தங்களுக்கு வேண்டியவர்களைக் கண்டும் காணாமலும் விடுவதும் சர்வ சாதாரணமான ஒரு நிகழ்ச்சியாகும். இதனால் பெரும்பான்மையான பிரயாணிகள் நீண்ட நேரம் காத்திருந்தும் உரிய இடத்தைப் பெற முடியவில்லை. இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

ஆனால் அநேகமாக மாலை நேரங்களில் தலைவர் திரு. எஸ். அமரசிங்கம் காரியாலயத்தில் பிரசன்னமாக இருக்கும்போது சில உத்தியோகத்தர்கள் மிகவும் சுறுசுறுப்பாக அங்கும் இங்கும் ஓடித் திரிவதையும், அவர் தங்களைக் காணவேண்டும் என்றும், தாங்கள் உண்மையாகக் கடமையாற்றுவதாக அவர் நம்பவேண்டுமென்றும் காரியாலயத்திற்குப் பக்கத்தில் உள்ள தரிப்பு நிலையங்களின் முற்பகுதியில் எல்லோரும் ஒருமித்து நின்று கடமையாற்றுவது பிரயாணிகளின் நகைப்புக்கிடமான அம்சமாக விளங்குகின்றது.

மேலும் தலைவர் தனது வாகனத்தில் ஏறிச் சென்றதும் திரும்பவும் அவர்கள் தங்கள் பழைய பல்லவியில் இறங்கிவிடுவதையும் பிரயாணிகளாகிய நாம் அவதானிக்க முடிந்தது. ஆகவே தலைவருக்குக் காட்டவே தாங்கள் கடமையாற்றுகிறார்களா? என்று பொதுமக்கள் கேட்கிறார்கள்.

அத்துடன் குறிப்பாக மாலை 3 மணி தொடக்கம் 8 மணி வரை ஒழுங்கீனங்களை அகற்றி சுமுகமான பிரயாணத்திற்கு இவர்கள் வழி செய்வார்களேயானால் இவர்களை எல்லோரும் பாராட்டுவது நிச்சயம்.

மேலும் பஸ் தரிப்பு நிலைய நடைபாதைகளிலும், பஸ்ஸிலும் சிலர் வீண் கதைகளை நின்று கதைப்பதையும், கும்மாளம் அடிப்பதையும் நிறுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர்கள் பேசும் பாஷைகள் அநாகரிகமாகவும், வெட்கத்தில் தலை குனியக்கூடியதாகவும் இருக்கிறது. இதில் சம்பந்தப்பட்ட மூவரோ, நால்வரோ தங்கள் அற்ப சுகத்திற்காக பெரும் பகுதி மக்களை துன்புறுத்தலாமா? இப்படியானவர்கள் சட்டத்தின்முன் கொண்டு செல்லப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்பதே எல்லோருடைய அவாவுமாகும்.

சி. கந்தையா.
யாழ்ப்பாணம்.

## ஆலய புனரமைப்பு நிதி

[அரியாலை]

மட்டக்களப்புப் பகுதியில் ஏற்பட்ட பயங்கரச்சூறாவளியினால் தரைமட்டமாக்கப்பட்ட நிலையிலிருக்கும் அங்கிலிக்கன் சபை ஆலயங்களை புனரமைப்புச் செய்வதற்கென கொழும்பு அத்தியட்சாதின ஆயர் அதிவண கவிடன்பெர்னண்டோ அடிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ள "ஆயர் சூறாவளி நிதிக்கு" நல்லூர் டரியாகோபு ஆலயசபையார் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியைசபைக் குருவும், யாழ் ஆர்ச் டீக்கனுமான அருட்திரு சாம் டி ஹேர்சிங்டன் அடிகள் அனுப்பி வைத்துள்ளார். [அ]

---

> "குழந்தைகள் ஆண்டில்

# ஏழைக் குழந்தைகளுக்கு தொடர்ந்து உதவுங்கள்"

[யாழ்ப்பாணம்]

"வசதியுள்ளவர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ தமது குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடும்போது, அதனை வசதியற்ற குழந்தைகள் வாழும் அநாதை இல்லங்கள், சமூகசேவைப் பகுதியினரின் இல்லங்கள், குழந்தை விடுதிகள் போன்றவற்றில் கொண்டாடுவதன் மூலம் வசதியற்ற குழந்தைகளுக்கு மகிழ்ச்சியையும் உதவிகளையும் செய்தவர்களாவார்கள். இத்தகைய நன்முயற்சிகளில் தனி மனிதர்களும் பொதுநிறுவனங்களும் ஒத்துழைக்க வேண்டும்"

மேற்கண்டவாறு குழந்தைகள் ஆண்டான இப்புததாண்டுச் செய்தியாக யாழ் சமூக சேவை உதவிப் பணிப்பாளர் திரு க. கெங்காதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்

அவர் தமது வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"கடந்த ஆண்டில் சமூக சேவைப் பகுதியுடன் சேர்ந்து பொதுமக்களும், பிரமுகர்களும், பொதுநிறுவனங்களும் ஆற்றியுள்ள சேவைகள் பெரிதும் பாராட்டுக்கு உரியதாகும் அதேபோல் குழந்தைகள் ஆண்டாக மலர்ந்துள்ள இப்புதிய ஆண்டிலும் தொடர்ந்து பொதுமக்களும், பிரமுகர்களும், பொதுநிறுவனங்களும் வசதிகளற்ற குழந்தைகளுக்கு மேலும் மகிழ்ச்சியையும், உதவிகளையும் வழங்கி அவர்களையும் தம்மோடு அரவணைத்துக்கொள்ள முன்வர வேண்டும் இப்பெரும் சேவையில் லயன்ஸ் கழகம், சிலபிரமுகர்கள் ஈடுபட்டுள்ளமையையும் நாம்மறந்துவிடலாகாது.' (ஊ-அ)

## பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவு; மாவட்ட ரீதியில் குழுக்கள்

### டி. ஐ. ஜி. 'சுந்தர்' தகவல்



[கொழும்பு]

"பொலிசாருக்கும் - பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவை பலப்படுத்தும் வகையில் மாவட்ட ரீதியில்குழுக்கள் அமைக்கப்படும்"

இவ்வாறு பிரதி பொலிஸ் மா அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் கொலை முதலான குற்றச்செயல்கள் குறைந்து காணப்பட்டன என கூறிய அவர் பொலிஸ் தலைமையகம் குற்றத்தடுப்புப் பிரசாரங்களை வலுப்படுத்தும் என்றும் சொன்னார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற பெரும்பாலான கொலைகள் திடீர் ஆத்திரத்தாலும், காணித்தகராறினாலுமே நிகழ்ந்துள்ளன என்றும் அவர் கூறினார். [உ]

## கந்தமுருகேசனார் நினைவு விழா

(புலோலி)

புலோலியூர் கந்தமுருகேசனார் நினைவு விழா இம்மாதம் 8 ம் திகதி பெரிய தேவனைத்தாய் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் எம். பி. திரு. மு சிவசிதம்பரம், புலோலி ஆண்கள் மகாவித்தியாலய அதிபர் திரு. வி. சே. ஏகாம்பரநாதன், புலோலி புற்றளை மகாவித்தியாலய அதிபர் திரு சி. தர்மலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

பல கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் இவ்விழாவில், இப்பகுதி மக்களின் அறிவு வளர்ச்சி கருதிப் பல நூல்களைக் கொள்வனவு செய்யுமுகமாக அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் நடைபெறும். (அ)

## அன்னசத்திரம் கோவிலில் சுவாமிஜி

[யாழ்ப்பாணம்]

யாழ். நாவலர் வீதியிலுள்ள அன்னசத்திரம் சமாதிக் கோவிலுக்கு புதன்கிழமை தோறும் வருகை தரும் ஸ்ரீ லக்ஷ்மி நாராயண சுவாமிஜியை வாரந்தோறும் அதிகமான அடியார்கள் தரிசித்துச் செல்கின்றனர்.

விரும்பும் அடியார்கள் அர்ச்சனைப் பொருள்களோடு புதன்கிழமைதோறும் காலை 10 மணியளவில் சுவாமிஜியைச் சந்திக்கலாமென்றும் பால், பழம் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அன்னசத்திர ஆலய அர்ச்சகர் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பு அசம்பாவிதம்: சிப்பாய் ஒருவருக்கு வேலை காலி

(கொழும்பு)

அண்மையில் மட்டக்களப்பு நகரில் பொதுமக்கள் மீது வெறியாட்டம் நடத்தியமைக்குக் காரணகர்த்தாவான இராணுவச் சிப்பாய் ஒருவரை இராணுவத் தளபதி திரு டெனிஸ் பெரேரா இராணுவ சேவையிலிருந்து விலக்கியுள்ளார்.

'ஒவ்வொரு இராணுவ வீரரின் நினைவும் மூச்சும் நாட்டைப்பற்றியதாகவும். நாட்டின் அமைதியைப்பற்றியதாகவுமே இருக்கவேண்டுமேதவிர வேறு சிந்தனை இராணுவவீரர்களுக்கு இருக்கக்கூடாது, அப்படி இருக்குமானால் அந்த இராணுவ வீரர் இராணுவச் சேவைக்கு அருகதையற்றவராவார்" என்று தளபதி திரு. டெனிஸ் பெரேரா தெரிவித்துள்ளார். (ஊ-அ)

## "காவலாளர்களுக்கு போதிய வசதிகள் அளிக்கவேண்டும்"

-யாழ். எம் பி.

[கொக்குவில்]

நாட்டில் நடக்கும் அட்டுழியங்களையும் களவு, கொலை ஆகியவற்றையும் தடுத்து அமைதியை ஏற்படுத்த வேண்டியது காவற்படையினரின் கடமை. அதேபோல் காவல்காரரிடம் ஒப்படைக்கப்பட்ட பண்டசாலைகளையும், களஞ்சியங்களையும் பாதுகாக்கவேண்டியது காவலாளர்களின் கடமை

இவ்வாறு இலங்கை அரசாங்க பொதுக் காவலாளர் சங்கத்தின் 11-வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பேசிய யாழ்ப்பாண எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் கூறினார்.

பாங்சால் வீதியிலுள்ள சங்கக் காரியாலயத்தில் சங்கத் தலைவர் எம். காராளசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு யோகேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில், "காவற்படையினருக்கு வழங்கப்பட்ட சலுகைகளிலும், உரிமைகளிலும் ஒரு சிறிதளவு உரிமைகளாவது காவற்காரருக்கு வழங்கப்படவில்லை. இவர்கள் குளிரிலும் கூட நித்திரை இல்லாது காவல் செய்கின்றனர். இவர்களுக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டியவைகள் கூட வழங்கப்படவில்லை" என்று கூறினார்.

பின்வரும் தீர்மானங்கள் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன

பாதுகாப்பற்ற உணவுக் களஞ்சியங்களை மூடவேண்டும்.

"காவலாளர்களுக்குக் களஞ்சியங்களில் சகல வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டும்.

"சீருடை, பொத்தான், ரோச்லைட், மழைக்கோட் ஆகியன வழங்கப்படாதவர்களுக்கு வழங்கப்பட வேண்டும.

"இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட சமயா சமய ஊழியர்களை நிரந்தரமாக்கவேண்டும்.

'சகல காவலாளர்களுக்கும் 8 மணி நேர வேலை வழங்கவேண்டும்

(5-ம் பக்கம் பார்க்க)

## அரசாங்க பொதுக் காவலாளர் சங்கம்

(கொக்குவில்)

இலங்கை அரசாங்க பொதுக் காவலாளர் சங்க 11வது வருடாந்தக் கூட்டம் பாங்ஷால் வீதியிலுள்ள சங்க காரியாலயத்தில் நடைபெற்றபோது கீழ்க்காண்போர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: [illegible] உபதலைவர்: [illegible] செயலாளர்: [illegible] சரம், உப செயலாளர்: சு. முத்துக்குமாரு, [illegible]: செ சுப்பிரமணியம் 6 பேர் கொண்ட நிர்வாகசபையினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



# "சட்டரீதியில் செயற்படின் மீண்டும் ஆட்சிக்குவரலாம்" இந்திராவுக்குதேசாய் அறிவுரை



புதுடில்லி, ஜன. 2

'திருமதி இந்திரா காந்தி மீண்டும் ஆட்சிக்கு வரலாம், சட்டரீதிக்குட்பட்ட வகையில் செயற்பட்டால் அவரது முயற்சி வெற்றிபெறலாம். அல்லது அது அசாத்தியமாகி விடும்''

இவ்வாறு பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் தெரிவித்தார். தொலைக்காட்சிப்பேட்டி ஒன்றில் அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் " திருமதிகாந்தியின் கட்சியினர் தவறான வழிகளைக் கையாண்டு ஆட்சியைக் கைப்பற்ற முடியாது. தவறான வழிமூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்தை அவர்கள் கைவிட்டுவிடவேண்டும்.'' என்றார். (உ)

## "கூடுதல் எண்ணை உற்பத்திஇல்லை" குவைத் அறிவிப்பு

லண்டன், ஜன. 2

''ஈரானில் உருவாகியுள்ள குழப்பத்தின் விளைவான எண்ணை பற்றாக்குறையைப் போக்க நாம கூடுதலான எண்ணையை உற்பத்திசெய்யப் போவதில்லை.''

இவ்வாறு குவைத் அறிவித்துள்ளது.

வழமையான உற்பத்தியே நடைபெறும் என்று குவைத் மேலும் தெரிவித்துள்ளது.

குவைத்தில் நாளொன்றுக்கு 20 லட்சம் பீப்பாய் எண்ணை உற்பத்திசெய்யப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## "கருத்து வேறுபாடு ஏற்படுவது புதுமை அல்லவே" -- பிரதமர் தேசாய்

புதுடில்லி, ஜன. 2

''ஜனதா கட்சியில் நெருக்கடிநிலை எதுவும் உண்டாகிவிடவில்லை'' என்று பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறியிருக்கிறார்.

'ஒரு கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது ஒன்றும் புதுமையானதல்லவே'' என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் பிரதமர் இவ்வாறு சொன்னார்.

முன்னாள் உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங்கிற்கு ஆதரவாக நடத்தப்பட்ட பேரணி பற்றி பிரஸ்தாபித்த பிரதமர் 'அர்த்தமற்ற செயல்' என சொன்னார், ஜனதா கட்சி மேலும் பலம்பெற்று வருகிறது என்றும் பிரதமர் கூறினர். (உ)

## பொன்னாலை திருவீதிகள் விஸ்தரிப்பு

[சுழிபுரம்]

பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவில் வெளிவீதிகள் புதிய தேர் ஓடுவதற்கு முன்பாக விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன மிகவும் ஒடுக்கமாயிருந்த தெற்கு வீதி தற்போது விஸ்தரிக்கப்பட்டுள்ளதால் வழமையாக ஏற்படும் நெருக்கடி தவிர்க்கப்பட்டுள்ளது.

## "அதிகாரத்தைக் கைப்பற்ற முறையீன முயற்சி" - ஜெகஜீவன்ராம்

ஹைதராபாத், ஜன. 2

'மக்களிடையே அமைதியின்மையை உண்டுபண்ணி அதிகாரத்தைக் கைப்பற்ற திருமதி இந்திராகாந்தி முயற்சிசெய்கிறார்'' என்று பாரத பாதுகாப்பு அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் ஹைதராபாத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

''திருமதி காந்தியின் தீயநடவடிக்கைகள் குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்று திரு. ராம கேட்டுக்கொண்டார். (உ)

[அரியாலை]

சூறாவளியினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவு முகமாக யாழ்ப்பாணம் மில்க்வைற் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் மூலம் சேகரிக்கப்பட்டபணம் மட்டக்களப்புஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. [அ]

## பங்களாதேஷ்-பாரத வர்த்தகம்

டாக்கா, ஜன 2

பாரதத்திற்கும், பங்களாதேஷுக்கும் இடையில் விரிவானதும், பன்முகப்படுத்தப்பட்டதுமான வர்த்தகம்நடைபெறவிருக்கிறது.

இந்தவகையில் டாக்காவில் ஒப்பந்தமொன்று கைச்சாத்தாகியுள்ளது

பாரதக்குழுவுக்கு திரு. வி ஆர் கிருஷ்ணசாமி தலைமை வகித்து டாக்கா சென்றிருந்தார்.

இரு தரப்புப் பேச்சுவார்த்தைகளும் பயனுள்ளவையாக அமைந்தன என்று அவர் தெரிவித்தார். (உ

# ஐரோப்பிய நாடுகளில் கடுங்குளிர், பனிவீழ்ச்சி

## மே. ஜெர்மனியில் 12 பேர் பலி

லண்டன், ஜன 2

ஐரோப்பாவில் நீண்டகாலத்திற்குப் பின் கடுமையான குளிரும் பனிவீழ்ச்சியும் உண்டாகியுள்ளது.

மேற்கு ஜெர்மனியில் கடுங்குளிர் காரணமாக 12 பேர் இறந்துவிட்டனர். சுவீடன், ஒஸ்ரியா, செக்கோஸ்லாவேகியா ஆகிய நாடுகளும் கடுங்குளிர், பனிவீழ்ச்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன

ஸ்கொட்லண்ட்யாட் பிற இடங்களுடன் துண்டிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் கடுங்குளிர், பனிவீழ்ச்சி பெரும் கஷ்டத்தை உருவாக்கியுள்ளது.

மேற்படி நாடுகள்ல் மக்கள் வீதிக்கு வராமல் வீடுகளிலேயே தங்கியிருக்கிறார்கள் என்றும் வீதிகளில் வாகனங்கள் அப்படி அப்படியே நிறுத்தப்பட்டு விட்டன என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. [உ]

## செம்பரப்பாக்கம் ஏரி

## ஒரு கோடி ரூபா செலவில் தமிழக அரசு சீரமைக்கும்

சென்னை, ஜன. 2

சென்னைக்கு அருகே உள்ள செம்பரப்பாக்கம் ஏரியை வலுப்படுத்தவும் றெகுலேட்டர் பொருத்தமாகவுமாக தமிழ்நாடு அரசு ஒருகோடிரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த ஏரியை தமிழ்நாடு அமைச்சர்கள் சிலர் நேற்று சுற்றிப்பார்வையிட்டனர்.

சமீபத்தில் பெய்த பேய் மழையின்போது இந்த ஏரி நிரம்பி பெரும் ஆபத்து விளைவிக்கும் என அஞ்சப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது (உ

## "இந்திராவுக்காக கண்ணீர் வடிப்போர் 'அந்தநாளை' மறக்கலாமா?" ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கேள்வி

ஹைதராபாத், ஜன. 2

''இந்திராகாந்தி கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதற்கு கண்ணீர் வடிக்கும் மக்கள் அவசரகால நிலையிலபோது அவர் நடாத்திய கொடூர ஆட்சி பற்றியும் நினைத்துப் பார்க்கவேண்டும்''

இவ்வாறு அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஹைதராபாத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

''சட்டத்தின் முன் ஏழை-பணக்காரன் என்ற பேதமில்லை'' என்றார் அவர்.

## நாட்டைவிட்டு

# ஈரானிய மன்னர் வெளியேறுவது உறுதி

தெஹ்ரான், ஜன. 2

கலவரங்கள் உண்டாகியுள்ள ஈரானில் இருந்து மன்னர் ஷா விடுமுறையில் நாட்டைவிட்டு வெளியேறுவது உறுதியாகிவிட்டது.

நேற்று நிருபர்கள் மத்தியில் பேசுகையில் மன்னர் இதனை உறுதிப்படுத்தினார் முடியாட்சிக்கு உண்டாகியுள்ள நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்காகவே விடுமுறையில் நாட்டைவிட்டு மன்னர் வெளியேறுவதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதமமந்திரி அஸாரி ராஜினாமாச் செய்ததையடுத்து காபந்து அரசாங்கம் நியமிக்கப்பட்டுள்ளது எனினும் மன்னர் எப்போது விடுமுறையில் நாட்டைவிட்டு வெளியேறுவார் என்று தெரிவிக்கப்படவில்லை.

டாக்டர் பக்தியாரின் தலைமையிலான புதிய அரசு பதவியேற்றதும் மன்னர் சிலதினங்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேறுவார் என தெரிவிக்கப்பட்டது.

ஈரானின கீழ்சபை இன்று கூடி டாக்டர் பக்தியாரின் நியமனத்தை உறுதிசெய்யும் என எதிர்பார்க்கப்பட்டது.

### பக்தியார் உறுதி

ஜனநாயக சோஷலிஷ அரசு ஒன்றைத் தாம உருவாக்க விரும்புவதாக டாக்டர் பக்தியார் உறுதியளித்துள்ளார் (உ)

அளவெட்டியில் சம்பவம்:

## தாலிக்கொடி அறுக்க முயன்றராம்; பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்

(பண்டத்தரிப்பு)

கோவிலுக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த பெண்ணின் தாலிக்கொடியைப் பட்டப்பகலில் அறுத்துச்செல்ல முயன்ற இளைஞரை அப்பகுதி மக்கள் துரத்திப்பிடித்துப் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் ஆலயத்திற்குச் சென்று வழிபட்ட பின்னர் தமது 10 வயது மகளுடன் திருமதி சின்னராசா என்ற பிரஸ்தாப பெண் வீடுதிரும்பிக்கொண்டிருந்ததாகவும் அப்பொழுதே இச்சம்பவம் நடந்ததாகவும் கூறப்படுகிறது.

சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த இளைஞர் தாலிக்கொடியை அறுக்க முற்பட்டபோது இருவரும் கீழே விழுந்ததாகவும் பின்னர் தாயாரும் மகளும் பலத்த கூக்குரலிடவே அப்பகுதியில் நின்றவர்கள் வந்து இளைஞரை பிடித்ததாகவும் கூறப்படுகிறது.

சுன்னாகம் பொலிசாருக்கு தகவல் அறிவித்ததைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு வந்த பொலிசார் சந்தேக நபரான சிறிதரன் என்ற இளைஞரைக் கைதுசெய்தனர் (க-அ)

## இடமாற்றம்

(புலோலி)

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் கான்ஸ்டபிள்களாக கடமையாற்றிவந்த திரு. மார்க்கண்டு, திரு சுனில், திரு சுந்தரராஜா ஆகியோர் இரத்மலானை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு இடம் மாற்றப்பட்டுள்ளனர் [அ]

**Rio** (Jaffna) Daily 10-30, 4-45, 7-00, 9-30.
Phone: 7607
RICHARD BURTON in
5th OFFENSIVE
Color (War Film) Scope

## காவலாளர்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

''அரசாங்க தொழிலாளர் இடமாற்ற சபையில் காவலாளர் சங்கமும் அங்கம் வகிக்கவேண்டும்.''

தீர்மானங்களின் பிரதிகள் யாழ். எம் பி யிடமும் உணவு கட்டுப்பாட்டு உதவி ஆணையாளரிடமும் கையளிக்கப்பட்டன. [அ]

**நாகம்ஸ்**
(மன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெமினி - பத்மினி
அன்னைவேளாங்கண்ணி
(கலர்)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார் - சுஜாதா
அன்னக்கிளி

**வெலிங்டன்**
[யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
லலிதா

**லிடோ**
[யாழ். நகர்] போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
பெண் தெய்வம்

**மனோகரா**
[யாழ்நகர்] தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீவித்யா குமாரி நடித்த
கணவன் மனைவி

**ராஜா**
(யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
ராமன் தேடிய சீதை
(கலர் - புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா
மற்றும் பலர் நடித்த
உயர்ந்தவர்கள்

வெற்றிமுழக்கமிடும் 6வது வெற்றி வாரம்!
**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7643
தினசரி 4 காட்சிகள்
10-30, 4-30, 7-00, 9-30
இன்னும் சில தினங்கள் மட்டும் — Last Few Days
LEE VAN CLEEF... LO LIEH...
BLOOD MONEY (Scope Color)

**REGAL** NOW SHOWING
(Jaffna) Daily at, 4-30 7-00 & 9-30 p.m.
Gamini Fonseke — Mary Tamm
in
RAMPAGE
(Jungle Adventure வனச்சாகசச் செயல்கள்) (Color)

**ராணி**
[யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள் சிலதினங்கள் மட்டும்
எம். ஜி. ஆர். - ராதா சலூஜா நடித்த
இதயக்கனி (புதியபிரதி)

**வின்ஸர்** போன்: 466
(யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
கலைமாமணி சிவாஜிகணேசன்,
மாலினி பொன்சேகா
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

குறிப்பு;
தியேட்டருக்கு வெளியே வேறு தியேட்டர்களில் பெற்ற டிக்கெட்டுகள் விற்கப்படுவதால் அவற்றை வாங்கி ரசிகர்கள் ஏமாறவேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

''சிங்களம், தமிழ்

# இரு மொழியையும் கற்றால் சிறப்பாகப் பணிபுரியலாம்''

## திருமலை அரசாங்க அதிபர்

(திருகோணமலை)

'பல இன கிராமசேவையாளர்கள் இணைந்து அளித்த தூமூன்று மாதப் பயிற்சி தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கவும், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும் வழி வகுக்கவேண்டும்'

திருகோணமலையில் புதிய நியமனம் பெற்று 21 கிராம சேவையாளர்கள் மத்தியில் திருகோணமலை அரசாங்க அதிபர் திரு ஜயதிஸ்ஸ பண்டாரகொட உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:

மக்களுடன் திறந்த மனத்துடன் அவர்களின் குறைகளையுணர்ந்து பணி புரிய வேண்டும். தமிழ் கிராம சேவையாளர்கள் சிங்கள மொழியையும், சிங்கள கிராம சேவையாளர்கள் தமிழ் மொழியையும் கற்றிருந்தால மக்களிடையே சிறப்பாக பணிபுரிய முடியும். கிராம சேவையாளர்களுக்கு நேர்மை, உண்மையான உழைப்பு அவசியம் தேவை. மக்களிடையே தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கவேண்டும் கிராமசேவையாளர்கள் தவறுகள் செய்தால் நான் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவேன்.' (கே)

## இன்றைய இராசிப்பலன்

மார்கழி மாதம் 19-ந் திகதி

புதன்கிழமை

(3-1-79)

**மேடம்:**- குடும்பக் கவலை தலைதூக்கும். சிலரின் கண்டனங்களுக்கும் இலகுவாக இடமேற்படும். இனபந்துக்களின தொல்லைகள் அதிகரிக்கும். மௌனம் நன்று.

**இடபம்:**- காரியத்தில் வெற்றி கிட்டமுண்டு. புதியதொழில்களில அதிக முன்னேற்றமுண்டு. தனமான வாழ்வுடன் உடைமையும் வந்து சேரும்.

**மிதுனம்:**- குடும்ப வாழ்க்கை சௌகரியம நிறைந்ததாகவிருக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையைத் தேடித்தரும் இறைநம்பிக்கை விரும்பத்தக்கது.

**கடகம்:**- நீண்டநாள் பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப் படலாம். அதிகாரத் தறைவுக்கிடமுண்டு. அவசர நடவடிக்கைகளைத் தவிர்க்கவும்.

**சிங்கம்:**- களஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கிடமுண்டு பிரிந்தவர்கள வாழ்க்கையில் மீண்டும் இணைவர். புத்திர சுகமும் கிடைக்கும்.

**கன்னி:**- செய்தொழில் தளர்ச்சி ஏற்படும். சதிசெய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். ஆயுதங்களுடன் பழகுபவர்கள் கவனம் செலுத்தவும்.

**துலாம்:**- பூமியால் சுகம் சிலர் வாழ்க்கையில பொதுசனத்தலைமைக்கும் இடமுண்டு பெரியவர் ஒருவர் உங்களுக்கு உதவுவர்.

**விருச்சிகம்:**- வாழ்வுப் பாதையில் வளமான திருப்பம் ஏற்படும். சிலர் வாழ்க்கையில் இடமாற்றத் திடமுண்டு. அரசினர் விருந்துக்கும் இடமுண்டு.

**தனுசு:**- சிலருக்கு வெளியூர்ப் பயணமும் ஏற்படும். மற்றவர்களின் இன்னல்கண்டு இரக்கம் காட்டுவீர்கள். புண்ணிய ஸ்தலயாத்திரையுமுண்டு.

**மகரம்:**- தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும் எதிர்பாராத வம்பிற்கும் இடமேற்படும் பண விவகாரத்திற்கும் இடமுண்டு

**கும்பம்:**- முன்னேற்றம் தடைப்படும். ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள். தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சி உருவாகும்.

**மீனம்:**- சன்னல் மொழிபேசி காரியத்தைச் சாதிப்பீர்கள் கவர்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும். வரவேற்கவேண்டிய தினம்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# வளர்த்த கடா பிள்ளையைப் பறித்தது!

## தாய் காப்பாற்றப்பட்டார்

(வவுனியா)

வீட்டில் அன்பாக வளர்த்த ஆடு துரத்திவந்தபோது, அதிலிருந்து தப்புவதற்குக் கைக்குழந்தையுடன் பாய்ந்தோடிய தாயார் குழந்தையுடன் கிணற்றில் தவறி விழுந்தார். குழந்தை கிணற்றுக்குப் பலியானது

முரசுமோட்டையைச் சேர்ந்த சசிகுமார் என்ற குழந்தையின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு ம. யோகலிங்கம் மரணவிசாரணை நடத்தினர்.

கிணற்றில் விழுந்த தருமதி ரீட்டா பேரியும், குழந்தையும் கிணற்றிலிருந்து வெளியில் எடுக்கப்பட்டபோது, குழந்தை இறந்திருந்ததாக விசாரணையில் கூறப்பட்டது.

நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப் பட்டது. (க-அ)

சீவல் தொழிலாளருக்கு

# சம்பளம் வழங்காததால் கள் வழங்கவில்லையாம்

[உடுப்பிட்டி]

கட்டைவேலி உடுப்பிட்டி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத்தில கள்விற்பனை தடைப்பட்டுள்ளது இச்சங்கத்தைச் சேர்ந்த சீவல் தொழிலாளர்கள் சங்கத்திற்குக் கள் வழங்காமையே இதற்குக் காரணம்.

பிரஸ்தாப சங்கத்தைச் சேர்ந்த சீவல் தொழிலாளர்கள் கடந்த சில தினங்களாக சங்கத்திற்குக் கள் வழங்காமல் விட்டுவிட்டனராம் கடந்த மூன்று வாரங்களுக்கான சம்பளம் இவர்களுக்கு வழங்கப்படாமையே இவர்கள கள் வழங்காததற்குக் காரணம் எனத் தெரியவருகிறது. (அ)

# பஸ்சேவை சீரானது அத்தியட்சகருக்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து உடுப்பிட்டி ஊடாக பருத்தித்துறை செல்லும் 751-ம் இலக்க பஸ் சேவையை அதிகரித்ததற்கும், சப்தது சீரான பஸ் சேவையை சீராக்கியதற்கும் பருத்தித்துறை பஸ் டிப்போ அத்தியட்சகர் வன்னியசிங்கத்தை அப்பகுதி மக்கள் பாராட்டியதுடன் நன்றி தெரிவித்துள்ளனர்

திரு. க. தியாகராசா தலைமையில் ஒரு கோஷ்டியினர் திரு. வன்னியசிங்கத்தை சந்தித்து இவ்விஷயங்கள் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினர். பஸ் டிப்போ அத்தியட்சகர் திரு வன்னியசிங்கமும் கப்பதுக் ராமத்திற்கு நேரடியாகச் சென்று நிலைமையை சீராக்க ஏற்பாடு செய்ததுடன் 751-ம் இலக்க சேவையையும் அதிகரிக்க ஏற்பாடு செய்திருந்தார்.

யாழ். பஸ் நிலையத்தில் 750 சாதாரண, கடுகதி பஸ்களை மற்றொரு இடத்தில் நிறுத்த ஒழுங்கு செய்யுமாறு திரு க. தியாகராசா தலைமையில் சென்றிருக்கும் கோஷ்டியினர் அத்தியட்சகரை வலியுறுத்தவுள்ளனர். (கொ நி.)

## நல்லூரில் நத்தார் விழா

[சரிபாலை]

நல்லூர் பரி யாக்கோபு ஆலய ஓய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகளின நத்தார் மரமும் பரிசளிப்பு விழாவும் சபை மண்டபத்தில் நடைபெற்றது நத்தார் தாத்தாவினால் பிள்ளைகளுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஆலய மண்டபத்தில் 'கிறிஸ்துவின் பிறப்பு' என்ற நாடகமும் நத்தார் கீதங்களும் ஓய்வு நாட்பாடசாலைப் பிள்ளைகளால் நடாத்தப்பட்டன இறுதியில் ஆலயகுருவும் யாழ் ஆச்சிடிக்கனுமான அருட் திரு. சாம் டி ஹோசிங்டன் அடிகள் ஆசீர்வாதம் வழங்கினர். (அ)

## கதாப்பிரசங்கம்

[யாழ்ப்பாணம்]

வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க பகாசனபதி (பன்றிக் கோட்டுப் பிள்ளையார், கோவிலில் விநாயகர் விரத 20ம் நாளாகிய இன்று யாழ் பிரபல ஸ்ரீ சிவ லவ நித்தியானந்தசர்மாவின் 'வள்ளி திருமணம்' என்னும் பொருள் பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நடைபெறுகின்றது.

[வ]

# அரசாங்க அதிபரின்கீழ் காணித்திணைக்கள வேலைகள்

(திருகோணமலை)

பிரதேச உதவி அரசாங்க அதிபர்களின்கீழ் பன்முகப் படுத்தப்பட்டிருந்த காணித் திணைக்கள கருமங்கள் யாவும் இனிமேல் அரசாங்க அதிபர்களின் நேரடி நிர்வாகத்தின் கீழ் நடைபெறும்.

இவ்வாறு காணி, காணி அபிவிருத்தி அமைச்சிடமிருந்து சகல அரசாங்க அதிபர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

சென்ற அரசாங்கத்தின் காலத்தில் காணித் திணைக்கள கருமங்கள் யாவும் பிரதேச உதவி அரசாங்க அதிபர்களின் கீழ் பன்முகப்படுத்தியிருந்தது.

அரசாங்கம் வழங்கிய தங்களுடைய காணிப் பிரச்னைகள் எதுவாயினும், கிராமசேவகர்கள் தங்கள் பகுதி பிரதேச உதவி அரசாங்க அதிபர்கள் மூலமே தீர்வு காணும் விதத்தில் கடந்த அரசாங்கம் பன்முகப்படுத்தப்பட்ட திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இன்றைய அரசு அக்கருமங்களை அரசாங்க அதிபர்களின்கீழ் கொண்டுவந்துள்ளது.

காணி அமைச்சின் புதிய உத்தரவின்படி, பிரதேச உதவி அரசாங்க அதிபர்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த, குடியேற்றத்திட்டத்தில் வழங்கிய காணிகளுக்கான ''பெர்மிட்'' வழங்குதல்- காணிக்கச்சேரிகள் நடத்துவது- அவற்றை எங்கு நடத்துவது என்பதுபற்றித் தீர்மானம் எடுப்பது- சட்ட விரோதமாக அரசாங்க நிலங்களில் குடியேறுவதைத் தடை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுவது- அவ்வாறு சட்டவிரோதமாகக் குடியேறிய விவசாயிகளுக்கு சட்டரீதியாக காணிகளை வழங்குவதுபற்றி ஒழுங்குகள் செய்வது ஆகிய பொறுப்புகள் யாவும் அரசாங்க அதிகாரிகளின் நேரடி நிர்வாகத்தின் கீழ் மாவட்ட காணி அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. (கே)

# நூல் நிலையத்திற்கு காணி வழங்கப்படும்

[சாவகச்சேரி]

கொடிகாமத்தில் சுமார் 60,000 ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள நூல் நிலையத்திற்கு 3 பரப்புக்காணியை வழங்க, கொடிகாமம் திருநாவுக்கரசு மடாலய பரிபாலன சபையினர் முன்வந்துள்ளனர்.

நூல் நிலையம் ஒன்று அமைத்துத் தருமாறு கொடிகாமம் கிராமமுன்னேற்றச் சங்கத்தினரும், அப்பகுதி இளைஞர்களும், விடுத்த வேண்டுகோளை ஏற்று கச்சாய் கிராமசபை ஆணையாளர் திரு க. முருகவேள் இத்திதியை ஒதுக்கியுள்ளார்.

கச்சாய்வீதியில திருநாவுக்கரசு நாயனார் மடாலயத்திற்கு அருகில் உள்ள காணி நூல் நிலையத்திற்கு வழங்கப்படவிருக்கிறது.

கொடிகாமம் கிராமமுன்னேற்றச்சங்கத்தினர் இந்நூல் நிலைய கட்டடத்தை அமைக்க ஒழுங்குசெய்துள்ளனர். (க)

## லயன்ஸ் கழகத்தினர்

# இடுகள், ஓடுகளுடன் மட்டக்களப்பு சென்றனர்

(புலோலி)

மட்டக்களப்பு பகுதியில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண மளிக்குமுகமாக பருத்தித்துறை லயன்ஸ்கழகத்தினர் இடுகுகள், ஓடுகள், லாம்புகள், உடுபுடவைகள் என்பனவற்றுடன் பாதிக்கப்பட்ட இடத்திற்குச் சென்றுள்ளனர்.

புலோலி கிழக்கு ஞான சம்பந்தர் கலைப்பணி மன்றத்தினர், புலோலி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் இங்குள்ள பாடசாலைகளின் உயர்வகுப்பு மாணவர்கள் ஆகியோர் பருத்தித்துறை லயன்ஸ் கழகத்திலருடன் சேர்ந்து இப்பகுதியிலுள்ள சகல வீடுகளுக்கும் சென்று இப் பொருட்களைச் சேகர்த்து லொறிமூலம் மட்டக்களப்பிற்குக் கொண்டு சென்றுள்ளனர். [க]

# அநாதரவாகக்கிடந்த குழந்தைக்கு அதிர்ஷ்டம்!

[திருகோணமலை]

வீதியில் கிடந்த அநாதரவான பெண் குழந்தையை வளர்ப்பதற்கு ஆசைப்பட்ட விவசாயி அதனை சுவீகாரம் எடுத்துக்கொண்டார். சம்பவம் நிலாவெளிப் பகுதியில் நடைபெற்றது.

நிலாவெளி வீதியினைல் தொழிலுக்காகச் சென்றுகொண்டிருந்த காளிமுத்து என்ற விவசாயி வீதியோரத்தில் இலைச் சருகுகளின் மீது ஒரு பெண்குழந்தையைக் கண்டார். அதனை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்று தொப்புள்கொடி வெட்டப்படாத நிலையில் இருந்த அக்குழந்தை சுத்தம்செய்து, பின் தனது மனைவியுடன் குச்சவெளி பொலிஸ் நிலையத்திற்குச் சென்று ஒப்படைத்தார்.

திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அக்குழந்தையை தான் வளர்க்கப்போவதாகவும், தனக்குப் பெண் குழந்தைகள் இல்லையெனவும் பொலிஸிடம் கூறினார்.

பொலிசாரின் சிபார்சுக்கு இணங்க திருகோணமலை சிறுவர் நன்னடத்தை அதிகாரி திரு. சி. சிவராஜன் அப்பெண் குழந்தையை காளிமுத்துவிடம் ஒப்படைத்தார். (கே)

# சமய அறிவுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

பூநகரி - கறுக்காய்த்தீவு கிராம அபிவிருத்திச் சங்கம் அண்மையில் நடாத்திய சமய அறிவுப் போட்டியில், செல்வி விஜயராணி கிருஷ்ணசாமி முதலாம் இடத்தையும், செல்வன் சிறீரங்கநாதன் இராசையா இரண்டாமிடத்தையும், செல்வன் சிறீகாந்தன் சிவபுண்ணியம் மூன்றும் இடத்தையும் பெற்றனர்.

மில்க்வைற் அதிபர் திரு க. கனகராசாவினல் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ச)

இப்பத்திரிகை [illegible] 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ந் திகதி [illegible] வெளியிடப்பட்டது.

[illegible] Eelanaadu's Post Box No. 49, Telegram Eelanaadu [illegible] Registered as a Newspaper in Sri Lanka

# திருவெம்பாவை உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன்கோவில் வருடாந்த மார்கழித் திருவெம்பாவை உற்சவம் இன்றுமுதல் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும். திர்வரும் 11ந் திகதி இரதோற்சவமும, அன்றிரவு ஆருத்ரா தரிசனமும், மறுநாள 12ந் திகதி தீர்த்தமும இடம்பெறும்,

இன்று அதிகாலை 5 மணிக்கு திருப்பள்ளியெழுச்சி ஓதலும், காலை 8 மணி முதல் சுந்தரேஸ்வரப்பெருமானுக்கும் சௌந்தராம்பிகை அம்பாளுக்கும், ஆண்டிகேணி ஐயனுருக்கும் விசேட அபிஷேகமும, அதைத் தொடர்ந்து திருவெம்பாவை ஓதுதலும் நடைபெறும். பகல் 10 மணி முதல் வசந்தமண்டப பூஜையும சுந்தரேசப்பெருமான் அம்பிகை சகிதம் தனது பரிவார மூர்த்திகளுடன் வீதியுலாவரும் அலங்காரக்காட்சியும் இடம்பெறும்.

மற்றைய வருடங்களிலும் பார்க்க இம்முறை ஆலயத்திற்கு அடியார்கள் அதிகளவில வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால் உற்சவ காலங்களில் அடியார்கள் தங்குவதற்கு ஏற்ற ஒழுங்குகள் ஆலயத் தொண்டர் படையினரால செய்யப்பட்டு வருகின்றன. (உருத்திர நிரு)

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று கொழும்பில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 697-வது தேசிய சுவீப்பின முதல் மூன்று முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு

**22 A 0066**

ரூபா 1 லட்சம்

இரண்டாம் பரிசு

**14 J 0308**

ரூபா. 40 ஆயிரம்

மூன்றும் பரிசு

**20 R 0995**

ரூபா 10 ஆயிரம்

தலா ரூபா 1,717/50 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு.

| | |
|---|---|
| 10 A 0925 | 13 A 0475 |
| 13 A 0675 | 17 A 0190 |
| 17 A 0314 | 20 A 0060 |
| 16 B 0975 | 20 B 0304 |
| 24 B 0926 | 29 B 0421 |
| 31 B 0452 | 06 C 0582 |
| 13 C 0258 | 14 C 0739 |
| 15 C 0743 | 19 C 0903 |
| 22 C 0344 | 23 C 0217 |
| 23 C 0749 | 08 D 0496 |
| 17 D 0231 | 26 D 0271 |
| 31 D 0769 | 06 E 0800 |
| 09 E 0 01 | 12 E 0227 |
| 24 E 0 51 | 02 F 0675 |
| 12 F 0234 | 20 F 0320 |
| 23 F 0231 | 24 F 0670 |
| 02 G 0498 | 09 G 0546 |
| 14 G 0777 | |
| 01 H 0691 | 15 H 0194 |
| 18 H 0385 | 01 J 0118 |
| 10 J 0510 | 16 J 0788 |
| 16 J 0864 | 20 J 0544 |
| 02 K 0070 | 02 K 0408 |
| 14 K 0203 | 26 K 0112 |
| 09 L 0292 | 09 L 0424 |
| 15 L 0085 | 16 L 0975 |
| 02 M 0482 | 05 M 0001 |
| 12 M 0611 | 17 M 0293 |
| 24 M 0724 | 07 N 0458 |
| 24 N 0388 | 28 N 0567 |
| 06 O 0451 | 11 O 0479 |
| 23 O 1000 | 14 P 0077 |
| 19 P 0088 | 26 P 0160 |
| 33 P 0660 | 02 Q 0560 |
| 18 Q 0564 | 22 Q 0019 |
| 0 R 0727 | 06 R 9514 |
| 20 R 0734 | 30 R 0994 |
| 16 S 0893 | 19 S 0485 |
| 24 S 0356 | 28 S 0120 |
| 30 S 0448 | 15 T 0348 |
| 20 T 0999 | 22 T 0448 |
| 07 U 0535 | 10 U 0467 |
| 11 U 0219 | 15 V 028[illegible] |
| 16 V 0060 | 21 V 0896 |
| 08 W 0573 | 18 W 0003 |
| 23 W 0765 | 23 W 0890 |
| 31 W 0251 | 05 X 0230 |
| 07 X 0910 | 12 Y 0990 |
| 14 Y 0975 | 32 Y 0852 |
| 14 Z 0708 | 21 Z 0965 |
| 26 Z 0931 | |

இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

# தமிழக சிற்பக்கலைஞர் கைவண்ணத்தில்..

(சுழிபுரம்)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் புதிய அழகிய சிற்பத்தேர் செய்வதற்காக தமிழகத்தைச் சேர்ந்த திரு. ஏகாம்பரசபதியார் மீண்டும பொன்னாலைக்கு வந்துள்ளார். தேர் சிற்பங்களை செய்யும் வேலையில் அவர் ஈடுபட்டுள்ளார். [உ]

# எஜமானிக்கு ரூ. 1000 பிணை

(உருத்திரபுரம்)

வீட்டில் வேலைசெய்தவேலைக்காரனைத் துன்புறுத்தி கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியதாகக் கூறப்பட்ட எஜமானி ஒருவர், ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வேலை செய்யும் மேற்படி இப் பெண்மணி தன்னைத் துன்புறுத்தக் கத்தியால் வெட்டிக்காயப்படுத்தியதாக கிளிநொச்சிப் பொலிசில் எம். அருளானந்தம் என்ற வேலைக்காரன் புகார் செய்திருந்தான். இதைத்தொடர்ந்து கிளிநொச்சிப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. கனகநாதனால் மேற்படி சந்தேகநபர் விசாரணை செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார். கிளிநொச்சி நீதவான் முன்னிலையில் மேற்படி சந்தேகநபர் ஆஜர் செய்யப்பட்டபோது ஆயிரம்ரூபா பிணையில் செல்லுமாறு நீதவான் உத்தரவிட்டார். தாக்கப்பட்ட வேலைக்காரனை நன்னடத்தை அதிகாரியிடம் ஒப்படைத்து வைத்தியபரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

# விறகுத் தட்டுப்பாடு

(நெல்லியடி)

வடமராட்சிப்பகுதியில் விறகிற்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இதனல் பொதுமக்கள் பெரிதும கஷ்டமடைந்துள்ளார்கள். ஒரு அந்தர் விறகு வடமராட்சிப் பகுதியில் 10 ரூபா தொடக்கம் 16 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. (உ)

# ஆறு மாதமாகியும் நியமனம் இல்லை

[அரியாலை]

பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் மூலம் தொகுதிகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்டு இலங்கைப்போக்குவரத்துச் சபையின் நடாத்துநர்களாக பயிற்சிபெற்ற பலருக்கு இன்றுவரை நியமனம் கிடைக்கவில்லை.

கடந்தவருடம் முற்பகுதியில் தெரிவு செய்யப்பட்டு நடாத்துநர்களாகச் சுமார் மூன்று மாதங்கள் பயிற்சி பெற்ற இவர்களுக்கு ஆறு மாதங்களுக்கு மேலாகியும் இன்றும் நியமனம் கிடைக்காததினல் இவர்கள் மிகவும் அதிருப்தியடைந்துள்ளனர்.

# இராணுவ காலாட் பிரிவு யாழ். வந்துள்ளது

[யாழ்ப்பாணம்]

மக்கள் நம்பிக்கையைப் பெற்று அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கக்கூடிய நன்கு பயிற்சிபெற்று அனுபவமுள்ள காலாட்படையைச் சேர்ந்த ஒரு பிரிவு யாழ்ப்பாணம் வந்துள்ளதாகத் தெரிகிறது. இருநூறு பேர் கொண்ட இப்பிரிவுக்கு மேஜர் ரூபசிங்கா பொறுப்பாக இருக்கிறார்.

## பர்மா

(1-ம் பக்கத் தொடர்ச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி

கூட்டத்தில் கண்டனம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

பர்மா ஈழமாணவர் பொது மன்ற அமைப்பாளரும், லண்டன் தலைமை நிலையப் பிரதிநிதியுமான திரு மா. மதியழகன் தீர்மானங்களைப் பிரேரிக்கமன் நப்பொருளாளர் திரு பா. கி. இராமச்சந்திரன் அனுமதித்தார்.

ஏகமனதாகத் தீர்மானங்கள் நிறைவேறின,

மன்றச்செயலாளர் திரு. மா. நடராஜன், ஆபிரகாம, எஸ். சேகர, எஸ். மாறன், பா. மீ. பாஸ்கரன் முதலானோர் பேசினர். [உ]

## பொலிஸ்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

மதி செய்யப்பட்ட பெருமளவு டைனமைற், திரிகள், கெற்புகள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

திருநெல்வேலி வங்கிக் கொள்ளை-கொலை சம்பந்தமாகத் தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற மேற்படி இரகசியத் தகவல் பற்றியும், இரகசியத் தகவல் தெரிவித்த நபர் குறித்தும் பொலிஸாரும், இராணுவத்தினரும் இ பொழுது நுணுக்கமாகப் பரிசீலனை செய்துவருகின்றனர்.

சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை கொலைச் சம்பவம் போன்று முன்னேற்பாட்டுடன் 'தயாரான' ஒரு தகவலா; அல்லது அதிகமான அளவில் பொலிஸ் - இராணுவம் சென்றதால் முயற்சி தோல்விகண்டதா என்பது குறித்துப்பொலிஸ்-இராணுவ உயர்மட்டம் ஆராய்ந்துவருகிறது.

## கிரிக்கெட்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்ததுடன் நேற்று முழு நாளும ஒரு விக்கட்டையும் இழக்காமல், கவாஸ்கரும் வெங்சர்க்காரும் 'ஜோடி' சேர்ந்து மொத்தம் 339 ஓட்டங்களை எடுத்து 'புதுமை' இந்திய கிரிக்கெட் டெஸ்டின் அண்மைக்கால வரலாற்றில் 'புதுமை' ஏற்படுத்தியுள்ளனர்

ஸ்கோர் விபரம்: இந்தியா- 300; 1 : 361, மேற்கிந்தியா- 327; 0 : 15.

இன்று கடைசி நாள். இந்த டெஸ்டில் மேற்கிந்திய கோஷ்டி வெற்றிபெறுவதற்கு இன்று மொத்தம் 32[illegible] ஓட்டங்கள் எடுத்தாக வேண்டும்.

# சுன்னாகத்தில் திருவெம்பாவை

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் சூராவத்தை முத்துமாரியம்மன் கோவிலில் இன்று திருவெம்பாவை ஆரம்பமாகவிருக்கிறது.

திருவாதவூரடிகள் புராணபடனமும் விதி பஜனையும் இடம்பெறும்.

புராண படனத்தை பிரம்மஸ்ரீ சி. சர்வேஸ்வரக் குருக்கள், ச. சண்முகானந்தக் குருக்கள் செ இன்னத்துரை, சி சண்முகவடிவேல் முதலானோர் ஆரம்பித்து வைப்பர். [உ]